**செய்தி வெளியீடு எண்: 909** **நாள்: 12.12.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (12.12.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் சென்னை, மாதவரம் மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நோய் அறிதல் ஆய்வகக் கட்டடம் மற்றும் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நோய் கண்காணிப்பு ஆய்வகக் கட்டடம், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் நோய் கண்காணிப்பு ஆய்வகக் கட்டடம், 1 கோடியே 21 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பால்வளத்துறை துணை பதிவாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் அதிநவீன ஆவின் பாலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக, மீன்வளத்தில் தனித்துவ தொழில் கல்வி வழங்கும் வகையில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் 2012–ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தில் துவக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் மீன்வளக்கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி மூலம் தமிழகத்தின் மீன் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டை மேம்படுத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகம் தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என்று 16.2.2018 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்பல்கலைக்கழகம், மீன்வள அறிவியல் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தரமான தொழிற் கல்வியை வழங்குதல், மீன்வள அறிவியலில் உள்ள முதன்மையான பிரிவுகளில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், மீன்வளர்ப்போர், மீனவர், வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு மீன்வள இணை தொழிற் கல்வியை வழங்குதல் போன்ற பணிகளை ஆற்றி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் சென்னை, மாதவரம் மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில், தமிழ்நாடு புதுமை துவக்கத் திட்டத்தின் மூலம் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நோய் அறிதல் ஆய்வகக் கட்டடம் மற்றும் வேளாண் அபிவிருத்தி திட்ட நிதியுதவி மூலம் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நோய் கண்காணிப்பு ஆய்வகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மாதவரத்தில் கட்டப்பட்டுள்ள நோய் அறிதல் ஆய்வகத்தில், மீன்களின் நோய்களை துல்லியமாகவும், துரிதமாகவும் கண்டறிவதற்கான ஆராய்ச்சி உபகரணங்கள் போன்ற வசதிகள், மீன் நோய்கள் மற்றும் மேலாண்மை முறைகள் பற்றிய தகவல்களை தொழில்நுட்ப அறிவியல் அடிப்படையில் சேகரித்து ஆரம்ப காலத்திலேயே மீன்களுக்கு ஏற்படும் நோய்களை தடுத்து அதன் உற்பத்தியைப் பெருக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், நோய் கண்காணிப்பு ஆய்வகத்தில், நீர் மற்றும் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் தரத்தினை அறிவதற்கான உபகரண வசதிகள், மீன்களின் நோய்களை துல்லியமாகவும், துரிதமாகவும் கண்டறிவதற்கான ஆராய்ச்சி உபகரண வசதிகள், மீன் மற்றும் இறால் வளர்ப்போர் பண்ணைகளில் நோயறி சேவைகள், நீர் மற்றும் குளத்தடி மண் பரிசோதனை சேவைகள் போன்றவை மேற்கொள்ளப்படும்.

மேலும், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், 1 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நோய் கண்காணிப்பு ஆய்வகக் கட்டடம்;

பால்வளத் துறை சார்பில் திருவள்ளூரில் 3757 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், 68 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை பதிவாளர் (பால் வளம்) அலுவலகக் கட்டடம் மற்றும் சென்னை, நுங்கம்பாக்கத்தில் 53 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன ஆவின் பாலகம்;

என மொத்தம் 4 கோடியே 46 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நோய் அறிதல் மற்றும் நோய் கண்காணிப்பு ஆய்வகக் கட்டடங்கள், பால்வளத் துறை துணை பதிவாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் அதிநவீன ஆவின் பாலகம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சி. காமராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சுக. பெலிக்ஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 12.12.2018**